[1981 ஏப்ரல் 22

தமிழ் நாட்டில் பாலியஸ்டர் பிலமெண்ட் நூல் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்

*வினா எண். 851—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் துறையில் பாலியஸ்டர் பிலமெண்ட் நூல் (Polyester Fil ment Yarn) தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ உரிமம் கோரி யாரேனும் விண்ணப்பித்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அவ்விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம். இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிட்., பம்பாய் என்ற நிறுவனம் மணலியில் தொழிற்சாலை நிறுவ மத்திய அரசுக்கு விண்ணப்பித்தது.

(ஆ) அவ்விண்ணப்பத்தினை ஆய்வு செய்தபின் அதனை ஏற்குமாறு மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்னைகள்

(அ) எஞ்சிய வினாக்களுக்கான விடைகள் அச்சிடப் பெறுவது.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இதற்கு முன்னால் நம்முடைய சட்டமன்றத்தில் வகுத்துக்கொண்டு பின்பற்றக்கூடிய முறை இன்று மாற்றப்பட்டிருப்பது தேவைதானா என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக்கொண்ட வினாக்களில் பாதியளவுக்குதான் முடிந்திருக்கிறது. இன்னும் பாதி இருக்கிறது. இன்றைக்கு ஆதி திராவிடர் நலன் பற்றிய மானியக் கோரிக்கை விவாதத்துக்கு வருகிறது. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நேரம்

1981 ஏப்ரல் 22]]பேரவை தலைவர்]

இராது என்ற காரணத்தால் மீதி இருக்கிற வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பெறும் என்று தெரிவித்தேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, அந்தக் கேள்விகள் மிகவும் முக்கியமானவை. உடுக்குறியிட்ட வினாக்கள் என்று தாங்கள் அனுமதித்துவிட்டீர்கள். அவையிலே அவை எடுக்கப்பட்டால்தான் நாங்கள் துணை வினாக்கள் கேட்க முடியும். ஆகவே, இன்றைக்கு இல்லா விட்டாலும் நாளையோ, அதற்கு அடுத்த நாளோ அல்லது வேறு ஒரு நாளோ எடுத்துக் கொள்ளும் வகையில் தங்களுடைய முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேவையில்லை. நாளைக்கு வேறு கேள்விகள் வருகின்றன. மேலும் வினாக்கள்-விடைகள் நேரத்தை 10.00 மணிக்குமேல் நீட்டிப்பது சரியல்ல என்றும் கருதுகிறேன்.

3. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. ஆகவே அதைப்பற்றி பேச வேண்டாம். என் அனுமதியின்றி பேசப்பெறுபவை எதையும் அவைக்குறிப்பிலே ஏற்ற வேண்டாம்.

திரு. துரைமுருகன் :

* * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.